# 18 விநாயகர் ஆலயங்கள்

**திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் கூப்புவர்தம்கை.**

எங்கள் நாட்டிலே விநாயகர் ஆலயம் இல்லாத ஊரே இல்லை என்று கூறலாம். விநாயகப் பெருமானின் வழிபாடு புராதன காலத்தில் இலங்கையிலே நிலைபெற்றிருந்தது என்பதற்கு வன்னிப்பகுதி, அநுராதபுரம், பொலனறுவை, தெய்வந்துறை ஆகிய இடங்களில் காணப்படும், விநாயகப் பெருமானின் புராதன ஆலயங்களின் அழிபாடுகள் சான்றாகவுள்ளது.


இன்றும் சிறப்போடும் பொலிவோடும் விளங்கும் விநாயகர் ஆலயங்கள் பல நம் நாட்டில் உள்ளன. இலங்கையின் வட பகுதியில் நல்லூரில் உள்ள வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் உள்ளது. இது பரராசசேகர னாற் கட்டப்பட்டதாகும். உரும்பிராயில் உள்ள கருணாகரப் பிள்ளையார் ஆலயம் கருணாகரத் தொண்டமானால் கட்டப்பட்டது. அரசகேசரியினால் நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டது. இவற்றைத் தவிர, இணுவில் பரராச சேகரப் பிள்ளையார், செகராசசேகரப் பிள்ளையார் ஆலயங்களும் சுழிபுரத்தில் உள்ள பறாளை விநாயகர் ஆலயம், மருதடி விநாயகர் ஆலயம், முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் என்பனவும் இலங்கையின் வட பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.



*சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம்*

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில், அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள் உடையது. வடக்கே கீரிமலை போன்று, கிழக்கே ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன் தீர்க்கும் புண்ணிய தலமாகவும் இது விளங்குகின்றது.

மாருதப்புரவீகவல்லியின் மகனான பாலசிங்க மன்னனின் சிந்து (கடல்) யாத்திரையின் போது கிடைத்த சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம் வீரமுனையில் உள்ளது. களுதேவாலயக் கல்வெட்டுக் குறிப்பிடும் களுதாவளை-யிலுள்ள களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம், கல்லடியில் உள்ள பிள்ளையார்



*வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம்*

ஆலயம், ஆரையம்பதியில் உள்ள திருநீலகண்டப் பிள்ளையார் ஆலயம், சங்கமன்கண்டிப் பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு புளியநகர் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயம், என்பனவும் திருகோணமலை இரட்ணசிங்கப் பிள்ளையார் ஆலயம் திருகோணமலை ஆலையடிப் பிள்ளையார் ஆலயம், அன்புவெளிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் என்பனவும் இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மத்திய மலைநாட்டின் தலைநகரான கண்டியில் கட்டுக்கலைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. அத்துடன் ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், கதிர்காமத்திலும் செல்லக் கதிர்காமத்திலும் உள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயங்கள் என்பனவும் சிறப்பு வாய்ந்த விநாயகர் ஆலயங்களாகும். இனிவரும் வகுப்புகளில் விநாயகர் ஆலயங்கள் பற்றி விபரமாக நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. விநாயகப் பெருமானின் புராதன ஆலயங்கள் காணப்பட்ட இடங்களைக் குறிப்பிடுக.
2. இலங்கையின் வட பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்கள் நான்கு தருக.
3. இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களைக் குறிப்பிடுக.
4. உங்கள் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களின் பெயர்களைத் தருக.

02. பின்வரும் ஆலயங்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை இணைக்குக.

| | | |
|---|---|---|
| 1. வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம் | (அ) | அரசகேசரி |
| 2. நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் | (ஆ) | கருணாகரத் தொண்டமான் |
| 3. உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம் | (இ) | பாலசிங்க மன்னன் |
| 4. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் | (ஈ) | பரராசசேகரன் |

## செயற்பாடு

''ஈழத்து விநாயகர் ஆலயம்'' என்ற தலைப்பில் 3 நிமிடம் உரை நிகழ்த்துக.

### பாடச்சுருக்கம்

- விநாயகப் பெருமானின் வழிபாடு புராதன காலத்தில் இலங்கையிலே நிலைபெற்றிருந்தது.
- இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் விநாயகர் ஆலயங்கள் உள்ளன.